ஸ்ரீ :

ஓம் :

தனிப்பிரதி 0-1-6 | ஸ்ரீ சந்தா ரூ. 1-0-0

# விவசாயி

செங்கற்பட்டு ஜில்லா நிலச்சுவான்கள் சங்கத்தின்

ஆதரவில் வெளிவரும்

மாதாந்திர பத்திரிகை.

" உழுதுண்டு வாழ்வாரேவாழ்வர்—மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்வர் "

மலர் 1. } சென்னை ;; திருவல்லிக்கேணி. ஜனவரி 1938. { 4.

ஆசிரியர் : அ. கொ. வேணுகோபாலாச்சாரியா.

19 MAY 1938
MADRAS

# அட்டவணை.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | விவசாயிகளின் கடன் நிவாரண மசோதா | ... 49 |
| 2. | குறிப்புகள் ... ... | ... 52 |
| 3. | விவசாயிகளின் கடன் நிவாரண மசோதா நோக்கங்களும் ஹேஷ்யங்களும் | ... 54 |
| 4. | நிலவரிவஜா ... ... | ... 56 |
| 5. | மார்ஷ் பாங்ஸ் சிபார்சை ஏற்கக்கூடாது | ... 57 |
| 6. | பயிர்த் தொழில் ... ... | ... 60 |
| 7. | விவசாயிகளின் கடன் சுமையை நீக்கும் சட்ட மசோதா | ... 61 |
| 8. | பொன்னேரி தாலுக்கா மிராசுதாரர்கள் கூட்டம் | ... 63 |
| 9. | செய்திகள் ... ... | ... 64 |

## Advertisement Rates.

| | | |
|---|---|---|
| FULL PAGE | — | RS. 10/— |
| HALF ,, | — | ,, 5/— |
| QUARTER PAGE | — | ,, 3/— |
| 1 LINE INSERTION | — | ,, 1/— |

*Editor.*

N. B. Advertisement charges are payable in advance.

குறிப்பு :—செல்வந்தர்கள் ரூ. 5/-க்கு குறையாமல் முன்பணம் செலுத்தி போஷகர்களாக வேண்டிக்கொள்ளுகிறோம்.

ஸ்ரீ:

# விவசாயி

ஓர் மாதாந்திர பத்திரிகை.

மலர் 1 | சென்னை — திருவல்லிக்கேணி. ஜனவரி 1938. | இதழ் 4

## விவசாயிகளின் கடன் நிவாரண மசோதா.

தேர்தல் காலங்களில் செய்த வாக்குறுதிகளில் மிகவும் முக்கியமானதான விவசாயிகளின் கடன் பளு நிவாரணத்தைப்பற்றி ஓர் பரிகாரமளிக்க நமது ஒப்பற்ற தலைவர் ஸ்ரீமான் C. ராஜகோபாலாச் சார்யார் வெளியிட்டுள்ள மசோதாவை நாம் முழுமனதுடன் வரவேற்கிறோம். (மசோதாவை வேறிடத்தில் காணலாம்) ஒரு மசோதாவை நிறுவும் போது எல்லா விதத்தையும் ஆராய்ந்து எல்லோரையும் திருப்திப் படுத்தக்கூடிய மாதிரியில் செய்வது எவராலும் எக் காலத்திலும்முடியாத காரியம். இது நமது தேசத்திலேயே நமது கவர்மெண்டாரால் விவசாயி களின் கடன் பளு நிவாரணத்திற்காக முதன் முதலாகக் கொண்டு வரப்படும் ஓர் மசோதாவாகும். பெரும் பான்மையாக கடன் பாதையில் மூழ்கிதத்தளித்துக் கொண்டு மீளும் வழி அறியாத விவசாயிகளுக்கு நிவாரணம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்கிற நன்நோக்கத்தை இம் மசோதாவின் பூர்வாங்கத்தில் காணலாம். கனம் முதன் மந்திரி 5-12-37ல் சென்னை காங்கிரஸ் மாளிகையில் பல பொருளாராய்ச்சி நிபுணர்களும், விவசாயிகளும், படித்தவர்களும், பத்திரிகாசிரியர்களும், ஐங்கிய நாணய சங்கங்களின் தலைவர்களும், ஆக ஆயிரக்கணக்கில் கூடியிருந்த ஓர் பெரிய கூட்டத்தில் இம் மசோதாவின் முக்கிய நோக்கத்தையும் சர்க்காரின் கருத்துகளையும் மற்றும் பல அம்சங்களையும் பற்றி சுமார் 1½மணி காலம் விரிவாக எடுத்துரைத்தா

வெகு ஜனங்களின் க்ஷேமார்த்தம் ஒரு சிலர் சுவல்ப நஷ்டமேற்பட்ட போதிலும் அதைப் பாராட்டாது ஏழை மக்களுக்கு உதவி புரிவதில் குறுக்கிடக் கூடாது என்று வேண்டிக் கொண்டார். தான் தயாரித்த அம் மசோதாவின் நோக்கத்திலும் கருத்திலும் அபிப்ராயபேதத் திற்கு இடமே இல்லை என்றும் மற்ற விஷயங்களில் ஒரே அபிப்ராயம் இருக்கமுடியாதென்ப தையும் எடுத்துரைத்து ஜனநாயகக்கட்சி ஆனதால் அவர்களுடைய பிரதி நிதிகள் வாக்காளர் களுக்கு உதவி புரியவே இம் மசோதாவை உடனே சட்டமாக்கப்போவதாகவும் அதில் தவறு தல் இருக்கும் பக்ஷத்தில் அவைகளை எடுத்துக்காட்டினால் தான் ஒத்துக்கொள்ளத்தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார். மீண்டும் மது விலக்கைப் போன்ற அபிப்பிராய பேத மற்ற மசோதா அல்ல ஆதலால் இம் மாகாணத்தின் கீழ்சபை மேல்சபை இரண்டிலிருந்தும் பொறு ப்பு வாய்ந்த நிபுணர்களைப் பொறுக்கி எடுத்து இம் மசோதாவை நன்கு ஆராய்ந்து அதன் பின்னர் தான் சட்டமாக்க விரும்புவதாகவும் இம் மசோதாவைச் சட்டமாக்கும் விஷயத்தில் ஏராளமான மெஜாரிட்டி தனக்கிருக்கிறது என்கிற மனப்பான்மை கொள்ளவில்லை என்றும் தெளிவாகச் சொல்லி இருக்கிறார். இவ்விஷயத்தில் மகா ஜனங்களின் அபிப்ராயங்களை பத்திரி கைகளின் வாயிலாகவும் கடிதங்களின் மூலம் நேரிலும்கண்டறியும் பொருட்டே இம்மசோதா வை நீண்ட காலத்திற்கு முன்னரே வெளியிட்டிருப்பதாகவும் கூறினார்.

அன்று முதல் பத்திரிகைகளில் மாகாணத்தின் பலபாகங்களிலிருந்தும் பலபெரியோர்களும், மிராசுதாரர்களும், வக்கீல்களும், சட்டசபை அனுபவம்வாய்ந்தவர்களும், இம்மசோதாவுக்கு சாதகமாகவும் பாதகமாகவும் சிலர் ஆதாரங்களுடன் ஆலோசனைகள் கூறியும் எழுதி இருக்கின்றனர். "இந்து", "மெயில்", "மித்திரன்" பத்திரிகைகள் இவ்விஷயமாக எழுதுவோருக்கு ஏராளமான உதவிபுரிந்து தங்கள் தலையங்கங்களில் கனம் முதன் மந்திரியும் அவர் சகாக்களும் கவனிக்கவேண்டிய சில ஆலோசனைகளை எடுத்துககாட்டியுள்ளார்கள். நமது ஜில்லா சங்கத்தின் சார்பாக கவனம் செலுத்தப்பட வேண்டிய சிற்சில விஷயங்கள் முறையே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இம்மசோதா சட்டமாகுமுன் எல்லா ஆலோசனைகளையும் திரட்டி எடுத்து ஆராய்ச்சி செய்து கூடுமானவரை பொதுமக்களில் எவருக்கும் நஷ்டமும் மனக்கொதிப்பும் உண்டாகாவண்ணம் முயற்சிகள் செய்யப்படும் என்று நினைக்கிறோம்.

இம்மசோதாவைப்பற்றி அதிகமாக விஸ்தரிக்காமல் இதுசட்டமான உடனே விவசாயிகளின் துன்பங்கள் தீர்ந்து விடுமென்பதை கவர்மெண்டார் நினைக்கஇடமில்லை என்று தான் நாம் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். கடன்பளுச்சுமை தீர வேண்டுமானால் உடனே கையோடு [illegible] களுக்கும் கடன்பட்டவர்களுக்கும் பணப்பற்று போய் சமரஸம்

ஏற்பட்டுவிட வேண்டும். கவர்மெண்டார் ஓர் மசோதாவைக் கொண்டுவர யத்தனித்தால் பலவித பாதகமான பாகங்களை பலர் எடுத்துக் கூறுகிறார்கள். கடன் கொடுத்தவர்களில் அசலிலும் 100,200 ரூபாய் தள்ளிக் கொடுத்துவிடு என்று சொல்பவர்கள் சிலர் இருக்கின்றனர். பிறர் மதிக்கக்கூடிய விலையைக்காட்டிலும் 50, 100 ரூபாய் அதிகம் வைத்துக்கொண்டு நிலங்களை கடன் தொகைக்கு கிரயம் செய்துவிட்டு கடன் பட்டவரே குத்தகைக்கு பயிரிட சம்மதிக்கிறவர் சிலர் உளர். சொத்து பொறுப்பு இல்லாவிடினும் நமது விவசாயிகளுக்கு சகஜகுணமான நிலத்தை விற்க இஷ்டப்படாமலிருப்பதை உத்தேசித்து கடன்கொடுத்தவன் குறிப்பிட்ட காலத்திற்கு ஸ்வாதீன அடமானம் போட்டு கடன் பட்டவரையே அனுபவித்துக் கொள்ளச் சொல்லுபவரும் சிலர் உளர். கொடுப்பார்தானில்லை. ஆகவே இம்மசோதா சட்டமாகி அமுலுக்கு வந்தபின் காங்கிரஸ் கவர்மெண்டாரின் செய்கையால் தான் நஷ்டமுண்டாகிறதென்று சொல்ல எவருக்கும் இடமில்லை. கடன் வாங்கினவர்களில் ஒரு சிலர் வாஸ்தவமாகக் கொடுக்கமுடிந்தும் கொடுக்காமல் தொந்தரவு பண்ணுகிறவர்கள் உளர். விவசாயத்திற்காக கடன் பட்டவர்கள் அனைவரும் என்று சொல்லமுடியாது. பெரிய மிராசுதாரர்களும் சரி, தாழ்ந்தகுடிகளும் சரி, 1918-19 முதல் 26-27வரை மகாயுத்தத்தின் காரணமாக உயர்ந்த விலைக்கு விளைபொருள்கள் விற்றதை நிரந்தரமாக இருக்குமென நம்பி நாலு மடங்கு ஐந்து மடங்கான விலைகொடுத்து நிலங்களை வாங்கி கடன்பட்டிருப்பவர்களும் சிலர் உளர். மிதமிஞ்சிய கல்யாணச்செலவுகள், குதிரைப் பந்தயங்கள், சூதாட்டங்கள் முதலிய அக்ரம வழிகளில் கண் மண் தெரியாமல் கடன் பட்டவர்களும் சிலர் உளர். ஆனதுபற்றி இம்மசோதாவினால் விவசாயத்திற்காக கடன் பட்டவர்கள் மாத்திரம் காப்பாற்றப்படுவது நியாயமாகும். எனினும் எப்படி இவர்களை மாத்திரம் நிர்ணயிப்பது? இது ஒரு பெரிய கஷ்டம். சகாயம் பெறக்கூடாத கொடியவர்களும் இம்மசோதாவினால் பாதுகாப்பு அடைவது ராஜநீதிக்கும் உலக முறைக்கும் விரோதம்தான். இத்தகைய நபர்களுக்கு கடன் கொடுத்தவர்கள் தங்கள் அசலிலாவது வட்டியிலாவது ஒரு சிறிய தொகையேனும் போக்கடித்துக் கொள்வதென்றால் வருத்தம் ஏற்படத்தான் செய்யும். ஆனால் வேறு வழியில்லை. இதை உத்தேசித்தேதான் நமது "விவசாயி"யின் இரண்டாவது இதழின் தலையங்கத்தில், நிஜ விவசாயியை கண்டறிந்து அபேக்ஷிக்குமவர்களுக்கு சர்க்கார் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று யோசனை கூறினோம்.

பொதுவாக எல்லோருக்கும் பொருத்தமாக இருக்கவேண்டி கவர்மெண்டார் ஒரே முறையைத்தான் அனுஷ்டிக்கக் கூடும். ஆகிலும் கீழ்சபை, மேல்சபைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்படும் கமிட்டியார், பலரும் அறிவித்திருக்கும் ஸாதகபாதகமான ஒவ்வொரு அம்சத்தையும் பரிசீலனை செய்து தக்கதோர் முடிவுக்குவந்து பலருக்கும் அனுகூலம் அளிக்க

கூடியவிதத்தில் மசோதாவை திருத்தி அமைத்து சட்டமாக்குவார்கள் என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை.

விவசாயிகளுக்கு குறைந்த வட்டிக்கு ஐக்கிய நாணய சங்கங்கள் சாகுபடிச் செலவுகளுக்கு பண உதவி புரிந்து முடக்கம் ஏற்படாமல் செய்விக்கப்பட வேண்டுவது அவசியம். இதுநிற்க எத்தகைய முடிவிற்கு வந்து சட்ட மேற்பட்ட போதிலும் கடன் நிவர்த்திக்கு ஒரு மார்க்கம் உடனே செய்ய கவர்மெண்டார் கடமைப்பட்டிருக்கிறார்கள். கடன் பட்ட விவசாயிகளின் கடன் தொகை எவ்வளவு குறைக்கப்புபட்ட தாயினும் அதையும் பைசல் செய்யக் கூடிய நிலையில் விவசாயிகள் இல்லை என்பது யாவரும் அறிந்ததே. ஆகலால் கையோடு சட்டத்தைக் கொண்டு வரும்போதே நில அடமான பாங்கிகள் மூலமாகவோ கவர்மெண்டார் தாங்களாகவோ 4 வட்டிக்கு மேற்படாத 30 வருஷ நீண்டகாலக் கடன்களாகக் கொடுத்து கடன்களை பைசல் செய்து கடன் பாதையிலிருந்து விவசாயியை விடுவிக்க கடமைப்பட்டிருக்கின்றனர் என்று வற்புறுத்துகிறோம்.

1000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை ஜீவனும்சமாகப் பெற்று அதன் மூலம் ஜீவித்து வரும் அனுதை விதவைகளும், நோயாளி சுகவாசிகளும், ஐக்கிய நாணய சங்கங்கள் போன்ற ஸ்தாபனங்களைப் போல இச்சட்டத்தினின்று விலக்கப்பட வேண்டுவது முக்கியம். இதை சட்டம் விவாதத்திற்கு வரும் போது நிர்வாககர்களும் அங்கத்தினர்களும் கவனிப்பார்களாக. மறுபடியும் விவசாயிகள் கடன்காரர்களாகாமலிருக்க வேண்டுமானால் கவர்மெண்டார் விவசாயியின் வருமானத்தை பெருக்கி, வேண்டும் வசதிகளளித்து, குறைந்தது 25 சதவிகிதம் நிலவரியை குறைத்தால் தான் காங்கிரஸ் கவர்மெண்டார் செய்யும் இக்காரியம் நிஜமான உதவியாகும்.

———(:o:)———

# குறிப்புகள்.

## நிலவரிக் குறைவு.

நமது காங்கிரஸ் கவர்மெண்டார் ஜனங்களுக்காக சர்க்கார் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டதன் உண்மையை அறிய இப்பொழுது நமக்கு சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. மார்ஷ் பாங்ஸ் கமிட்டியாரின் சிபார்சுகளையும் பல சங்கங்களும், தூதுகோஷ்டியினரும் நேரில் சொல்லிய விஷயங்களையும் சமர்ப்பிவித்த விண்ணப்ப பத்திரங்களையும் செவ்வனே

கவனித்து ஒதுக்கிவைக்கப்பட்ட 75லக்ஷம் ரூபாயிலிருந்தே எல்லா ஜில்லாக்களுக்கும் திருப்தி அளிக்குமாறு ஒரு தீர்மானம் செய்து விட்டனர். அத்தீர்மானத்தின்படி நமது ஜில்லாவுக்கு நிலவரியில் ரூபாய் ஒன்றுக்கு இரண்டணு விகிதம் குறைவு ஏற்படும். ஆனுல் இக்குறைவு நஞ்சை நிலங்களுக்கு மாத்திரமே. கிராமவாசிகளோடு சம்பந்தப்பட்டு அவர்களின் குறைகளை நன்கறிந்த நமது மந்திரி கோஷ்டியினர் இவ்விரண்டணுக் குறைவு கிராம வாசிகளின் தற்போதைய கஷ்டத்துக்கு தகுந்த பரிகாரமாக மாட்டாதென்பதை உணர்ந்திருக்கிறுர்கள். மீண்டும் அதிகபோதுமான பரிகாரம் அளிக்க முயற்சிசெய்ய வேண்டிய தங்கள் கருத்தையும் அறிக்கையிட்டிருக்கின்றனர். இவ்வுபகாரத்திற்கு காங்கிரஸ் மந்திரிகளை பாராட்டி அவர்களுக்கு நமது நன்றியை செலுத்தகடமைப்பட்டுள்ளோம். கிராமவாசிகளின் துன்பங்களை நீக்க மற்றும் எல்லா விதத்திலும் உதவிபுரிய ஆண்டவன் நமது மந்திரிகளுக்கு தீர்காயுர் ஆரோக்கியத்தைக் கொடுத்து நீடித்து ராஜாங்கத்தை நடத்த அருள் புரிவாராக.

:o:

# மகாத்மாஜீயின் வார்தா கல்விதிட்டம்.

மகாத்மா காந்தியின் கட்டளைப்படி நியமிக்கப்பட்ட கமிட்டியார் இனி நம் நாட்டில் கையாள வேண்டிய கல்வி திட்டத்தைப்பற்றி தங்கள் யாதாஸ்தை வெளியிட்டு விட்டார்கள். அதன் படி கவர்மெண்டார் உயர்தரபடிப்பிற்காக அதிகச்செலவில் காலேஜீகள் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை அப்படி இருந்தாலும் கவர்மெண்டு உதவி புரிய வேண்டுவது இல்லை. தொழில் முறையில் ஈடுபடக்கூடிய என் ஜினீரிங் காலேஜீ முதலியவைகள் நீக்கப்பட்டுவிட்டன. பிள்ளைகளுக்கு 7வயது முதல் 14வயது வரையில் கட்டாயமாக பிரதி தினமும் 3 மணி நேரம் தொழில் முறைகளும் 2 மணி நேரம் பொதுஅறிவுக்கான வித்தைகளும் கற்பிக்க திட்டம் போடப்பட்டிருக்கிறது. பெண் குழந்தைகள் இஷ்டப்பட்டால் 12 வயதிலேயே வித்தியாப்பியாஸத்தை நிறுத்திக்கொள்ளவும் இடந்தருகிறது. ஆண் பிள்ளைகள் 14 வயதில் பள்ளிக்கூடம் போவது நிறுத்தியவுடன் உயர்தர படிப்புக்கு முடியாத பக்ஷத்தில் தானுகவே சம்பாதித்து தன் குடும்பத்திற்கு உதவி புரியகூடிய நிலை ஏற்பட்டு விடும். நாடெங்கும் இக்கட்டாயப் படிப்பை பரவச்செய்ய கணக்கற்ற பள்ளிக்கூடங்கள் ஏற்படுமானதால் கவர்மெண்டாரே சொந்த செலவில் நடத்த முடியாத காரணத்தை ஒட்டி பாடசாலைப் பிள்ளைகள் தொழில் முறையை கற்கும் போது செய்யும் வஸ்துக்களை விலையாக்கி அத்தொகையினுல் அந்தந்த பள்ளிக்கூடத்தை நடத்த யோசனை கூறப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு வரையில் சாத்தியமான காரியமென்பதை அனுபவத்தில் தான் பார்க்க வேண்டும். ஒருகாலேஜீக்கு சம்பளம் விளையாட்டுகள் (Sports) முதலிய வைகளுக்கு தற்போது அளித்து வரும் ஏராளமான பண உதவி (½ contribution) நின்று பயனற்றுப் போன படிப்பும் குறைவதுடன் நமது நாட்டில் குழைந்தைகளுக்கு கட்டாயக்கல்வி பெருகி பிழைக்கக்கூடிய மார்க்கம் பால்யத்திலேயே போதிக்கப்படுவது நாம் வெகு நாளாக கோரிவந்த தோர் பெரிய காரியமானதால் இவ்வார்தா கல்விதிட்டத்தை நாம் முழுமனதுடன் ஆமோதித்து வரவேற்ப

துடன் மகாத்மாஜீ தற்போதைய பயமளிக்கும் தேக நிலையிலிருந்து தப்பித்து நோயற்ற வாழ்வுடன் தீர்க்க காலமிருந்து நமது நாட்டை ஒவ்வொரு வகையிலும் மேன்மையடையச் செய்ய ஆண்டவன் அருளை சதா துதிக்கிறோம்.

———:(o):———

# நம் சங்கத்திற்குக் காரியாலயம்.

செங்கற்பட்டு ஜில்லா நிலச்சுவான்தார்கள் சங்கத்திற்கு சொந்தமாக செங்கற்பட்டில் ஒரு காரியாலயம் ஏற்படுத்தி அதில் விவசாயிகளுக்கு உபயோகமான புஸ்தகங்களுடன் ஓர் புஸ்தகசாலையும் அப்போதைக்கப் போது உலக விஷயங்களை விவசாயிகள் அறிந்து மேன்மையடைய பல உள்நாட்டு வெளிநாட்டுப்பத்திரிகைகள் அடங்கிய வாசகசாலை ஒன்றும் அமைக்கப்பட வேண்டு மென்று சங்க நிர்வாககர்கள் கருதினர்கள். அக்கருத்தைத் தெரிவித்து செங்கற்பட்டு ஸ்ரீகோதண்ட ராமஸ்வாமி தேவஸ்தானத்தின் நிர்வாகஸ்தர்களை ஹைரோடிலுள்ள தேவஸ்தானத்தின் இடத்தில் ஒருமனை பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டோம். அப்பிரார்த்தனைக்கிணங்க ஹைரோட்டில் தேவஸ்தான மதலுக்கும் புஷ்கரணிக்கும் நடுவில்ஓர் மனை அளித்து உதவிபுரிந்தனர். நிர்வாகஸ்தர்களுக்கு சங்கத்தின் என்றும் மறவாத நன்றியறிதலை தெரிவித்துக்கொள்ளுகிறோம். எல்லோரையும் காரியாலய நிர்மாணத்திற்குவேண்டும் உதவி புரியவும் கேட்டுக்கொள்ளுகிறோம். இவ்வேண்டு கோளுக்கு பொது ஜனங்கள் தக்க ஆதரவு அளித்து சங்க நிர்வாககர்களின் சிறந்த நோக்கத்தை வெற்றி பெறும்படி செய்வார்களாக! இந்நோக்கம் ஈடேறவும் விவசாயிகள் விஷயங்களை அறிந்து காலத்திற் கேற்ற நடவடிக்கையினல் முன்னுக்கு வரும்படி செய்விக்கவும் நமது ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு ஐக்கிய நாணயச்சங்கமும், பஞ்சாயத்து போர்டும், போர்டு பாடசாலைகளும், மற்ற பொது ஸ்தாபனங்களும் கடமைப்பட்டிருக்கின்றன. ஆகவே இத்தகைய ஸ்தாபனங்களின் நிர்வாககர்கள் அனைவரையும் நமது "விவசாயி"க்கு சந்தாதாரராகி தருவித்து கிராமவாசிகளை படிக்கச் செய்து உதவிபுரிய மிகதாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

———:(o):———

# விவசாயிகளின் கடன் நிவாரண மசோதா.

## நோக்கங்களும்—ஹேஷ்யங்களும்

———:(o):———

இம்மாகாணத்தின் மூலாதாரமாக விளங்கும் விவசாயத்தொழிலுக்கு புத்துயிரூட்ட வேண்டுமென்பதே இம்மசோதாவின் நோக்கம். நேரடியாகவோ அல்லது மறைமுகமாக ஜனங்களில் எல்லா வகுப்பினரின் சுபிக்ஷமும் பொருளாதாரத்துறையில் விவசாயி வசிக்கும் உன்னத நிலையையே பொறுத்திருக்கிறது. விவசாயியின் தற்போதைய பரிதபிக்கத்தக்

க நிலைமை யாவரும் அறிந்ததே. ஒருபக்கம் அவனது வருமானம் குறைந்து அவன் கஷ்டப் பட்டுக்கொண்டு இருக்கையில் மற்றொரு பக்கம் அவன் வாங்கின கடனுடைய வட்டி வருஷா வருஷம் குவிந்து அவனை நெருக்கிக் கொண்டிருக்கிறது. பெருவாரியானவர்கள் விஷயத்தில் வட்டி விகிதமோ் தர்ம நியாயத்திற்கு விரோத மானதாக இருக்கிறது.

இப்பொழுது விவசாயிகள் படும் துயரத்திற்கு முக்கிய காரணம் கடன் சுமைதான். ஜனங்களின் நன்மை விஷயத்தில் தனது பொறுப்புகளைப்பூராகவும் உணர்ந்துள்ள எந்த நவீன அரசாங்கமும் ஜனங்களுக்கு வேண்டிய உணவைத் தயாரித்துக்கொடுப்பவர்களை இத் தகைய தாங்கமுடியாத சுமையினின்றும் விடுவிக்கக்கடமைப்பட்டிருக்கிறது. கடன் தொல்லை காரணமாக விவசாயிகளில் பலர் தங்களது நிலங்களை இழக்கும்படியாக நேரிடுகிறது இந்த நிலங்கள் விவசாயத்தொழில் என்றால் என்னதென்றறியாதவர்கள் வசம் போய்ச்சேரு கின்றன. இம்மாதிரி நடந்து வருவதை அநுமதித்து, இதன் காரணத்தால் விவசாயியின் பரம்பரைத்தொழில் திறமை திருப்பிடித்துப்போகும்படி விடுவது ராஜாங்கத்திற்கு நியாய மானதல்ல. சமரஸமாகத்தீர்த்துக்கொள்ளுதல் போன்ற நிர்பந்தமில்லாத முறைகளை கையாண்டு பார்த்தாகிவிட்டது இவற்றால் கஷ்டம் தீரவில்லை; எனவே, நிர்பந்தமுறையான கொள்கையை அநுஷ்டிக்கவேண்டிய அவசியமேற்பட்டிருக்கிறது.

கடனாளி கொடுக்கவேண்டிய அசல் பாக்கிஎவ்வளவோ அதைக் கொடுத்துவிட்டால் கடன் தீர்ந்து போய்விடுகிறதென மசோதாவில் வகைசெய்யப்பட்டிருக்கிறது. 1937ம் வருஷம் அக்டோபர் மாதம் முதல் தேதியிலிருந்து விவசாயிகளின் கடன் விஷயத்தில் வருஷம் 1க்கு 100க்கு 6-விகிதத்திற்கதிகமாக வட்டி வாங்கப்பட்டுவரும் இனங்களில் கடன்பட்டவர் இருபங்கு அசல் தொகையைச் செலுத்தி விட்டால் அவர் பூராக்கடனையும் பைசல் செய்து விட்டவராகக் கருதப்படுவார்.

விவசாயத்தொழிலைத்தவிர இதர தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இம்ம சோதாவின் அநுகூலங்கள் கிடைக்காமலிருக்கும்படி சாத்தியமான வரையில் விலக்குசெய்யப் பட்டிருக்கிறது. கவர்மெண்டுக்கும், ஸ்தல ஸ்தாபனங்களுக்கும், கூட்டுறவு பாங்கிகளுக்கும் சில ஜாயின்ட்ஸ்டாக் பாங்கிகளுக்கும், செலுத்தப்படவேண்டிய பாக்கிகளும் இம்மசோதா வரம்பினின்றும் விலக்கப்பட்டிருக்கின்றன.

பிரச்னைகளைச் சுலபப்படுத்தவும், அவற்றில் சுலபமான முடிவிற்கு வரவும் சாத்தியப் படும்படி மசோதாவைத் தயாரிப்பதில் சகல முயற்சிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. இதனால் வியாஜ்ஜியங்கள் குறையும்.

நடைமுதல் பாக்கியைச் செலுத்துவதில் எவ்விதத்திலும் தவறுவதற்கு ஆதரவு காட்டாமல் பழைய வாரபாக்கிகளின் சுமையினின்றும் குடிகளுக்கு நிவர்த்தியளிக்கவும் மசோதாவில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வகைகளில் சட்டமியற்றப்படும் என்பதை எதிர்பார்த்து கடன் காரர்கள் நிர்ப்ப

ந்த முறைகளை கையாண்டு வருகிறார்கள் என்றும் அவற்றால் விவசாயிகளுக்கு பெரும் கஷ்டம் உண்டாகி இருப்பதாகவும் எண்ணற்றபுகார்கள் கிடைத்திருப்பதால் 1937ம் வருஷம் அக்டோபர்மாதம் முதல் தேதியிலிருந்து எந்தெந்தக் கடனாளிகளின் பேரில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றனவோ அவர்களுக்கும் இம்மசோதாவின் அனுகூலத்தை வழங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

——:(o):——

# நிலவரி வஜா.

——:(o):——

சென்னைப்பிரசார மந்திரி பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:

கனம் பிரதமமந்திரி 1937-38வது வருஷத்திய வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிக்கும் பொழுது, நடக்கும் பசலிக்கு நிலவரிவஜா அளிப்பதற்காக 75 லக்ஷம் ரூபாய் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறதென்று கூறினார். எந்தவிதத்தில் இதை எந்த விகிதமாக வினியோகிப்பது என்பதை கவர்மெண்டார் இதுவரை யோசித்து வந்தார்கள். இந்த முக்கியமான விஷயத்தைப் பரிசீலனை செய்வதில் கவர்மெண்டார், மார்ஷ் பாங்ஸ் கமிட்டியாரின் சிபார்சையும், சென்ற பசலிகளில் அளிக்கப் பட்ட நிலவரி வஜாவையும் ஆலோசனைக் கெடுத்துக்கொண்டார்கள். மேலும் அவர்கள் இந்த ராஜதானியின் பலபாகங்களிலுள்ள நபர்களுடையவும், சங்கஙகளுடையவும் எழுத்துமூலமானதாகவோ அல்லது வாக்குமூலமானதாகவோ இருக்கிற அபிப்ராயங்களையும் யாதாஸ்துகளையும் கவனத்தில் வைத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். நடக்கும் பஸலிக்கு கவர்மெண்டார் அளிக்கஉத்தேசித்திருக்கும் வரிவஜாவானது அப்போதைக்கப்போது சேர்ந்தாப்போல் உயர்த்தப்பட்டிருக்கும் நிலவரியையும் தண்ணீர்த்தீர்வையையும் குறைக்கவேண்டுமென்ற கோரிக்கைகளுக்கு பூர்ண திருப்தி அளிக்காது என்பதை கவர்மெண்டார் உணர்கிறார்கள். மேலும் கவர்மெண்டார் இப்போழுது அளிக்கப்பட்டிருக்கும் நிலவரிக்குறைவானது அவர்கள் போதுமான பரிகாரம் என்று நினைக்கிறதாக கருதக்கூடாது என்று தெரிவிக்க விரும்புகிறார்கள். இப்பொழுது அளிக்கப்பட்ட பரிகாரமானது அதற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட தொகைக்குள்ளாகவே இருக்க வேண்டியிருக்கிறது. இவ்வரையறைக்குள் கஷ்டப்படுகிறவர்கள் எல்லோருக்கும் நியாயம் வழங்கவேண்டி இருக்கிறது.

2. வினியோகம் செய்ய வேண்டிய வழிகளை எல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்த பிறகு கவர்மெண்டார் கீழே கொடுத்திருக்கும் திட்டமே, எல்லா சந்தர்ப்பங்களையும் கவனிக்கும் பொழுது, ஒவ்வொரு ஜில்லாவிற்கும் கூடுமானவரை நியாயமான தொகையை அளிக்கும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறார்கள்.

3. ஆகையால் அவர்கள் 1347ம் பஸலிக்கு நிலவரிவஜா பின்வருமாறு இருக்க வேண்டுமென்று தீர்மானிக்கின்றனர்:

(i) ரீஸெட்டில்மெண்டு ஆனபொழுது நஞ்சை, புஞ்சை, தோட்டப்பயிர்கள் இவை

கள் மீது கீழ்க்கண்ட இடங்களில் அதிகப்படுத்தப்பட்ட தீர்வையை எடுத்து விடுவது (Cancellation):— (1) சிகாகோல், இச்சாபூர் தாலூக்காக்கள் தவிர விசாகபட்டினம் ஜில்லா (2) கீழ்கோதாவரி ஜில்லா (3) மேல்கோதாவரி ஜில்லா (4) கிருஷ்ணா ஜில்லா (5) பெல்லாரி ஜில்லா (6) காதிரி தாலூக்கா தவிர அனந்தபூர் ஜில்லா (7) சித்தூர் ஜில்லா (சித்தூர், பால்மனேர், சந்திரகிரி தாலூக்காக்கள்) (8) வட ஆற்காடு ஜில்லா (வந்தவாசி, திருவண்ணாமலை, செங்கம் தாலூக்காக்கள், திருப்பத்தூர் தாலூக்காவில் இரண்டு கிராமங்கள், போளூரில் 155 கிராமங்கள், செய்யார் தாலூக்காவில் 78 கிராமங்கள், ஆரணியில் ஒரு கிராமம்.) (9) தென்னாற்காடு ஜில்லா (10) சேலம் ஜில்லா (மலை கிராமங்கள், தென் தாலூக்காக்களாகிற, சேலம், ஹசூர், திருச்செங்கோடு, ஓமலூர், நாமக்கல், ஆத்தூர்.) (11) கரூர் தாலூக்கா தவிர திருச்சி ஜில்லா (12) தஞ்சாவூர் ஜில்லா (13) மதுரை ஜில்லா (14) திருநெல்வேலி ஜில்லா அஞ்செங்கோ சப்-தாலூக்கா. (15) நீலகிரி ஜில்லாவில் கூடலூர் தாலூக்கா மாத்திரம் (16) மலபார் ஜில்லா (17) தென்கன்னடம் ஜில்லா. மொத்த வஜா இவற்றிற்கெல்லாம் 57 லக்ஷம் ஆகிறது.

(ii) இவ்விராஜதானியில் மீதியுள்ள இடங்களில் நஞ்சை நிலங்களுக்கு ரூபாய்க்கு இரண்டணா விகிதம் குறைத்தல். இது மொத்தம் பதினன்கு லக்ஷங்கள் ஆகிறது.

(iii) கீழ்கோதாவரி, மேல்கோதாவரி, கிருஷ்ணா ஜில்லா, குண்டூர் ஜில்லாவின் டெல்டாப் பிரதேசங்கள் இவைகளுக்கு தாற்காலிகமாக முதல சாகுபடி மீது தண்ணீர்த்தீர்வையை ரூ. 6—4—0 இலிருந்து ரூ. 5—8—0க்கும் அதிகப்படியான சாகுபடிகளுக்கு இதே விகிதமாகவும் குறைத்தல். இது மொத்தம் நான்கு லக்ஷங்கள் ஆகிறது.

(iv) கவர்மெண்டார் மேற்கூறியவாறு விநியோகித்திருப்பது வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையை உபயோககரமாக செலவழிக்க வேண்டியதைக் குறித்தே என்றும் இது வருங்காலத்திய கவர்மெண்டின் நிலவரி முறையை குறிப்பதாகாதென்பதையும், தெளிவு படுத்தவிரும்புகிறார்கள்.

---

## மார்ஷ் பாங்ஸ் சிபார்சை ஏற்கக்கூடாது.

——:(o):——

### தூது கோஷ்டியினரின் வேண்டுகோள்.

---

2-12-37 அன்று கனம் ரிவின்யூ மந்திரி ஸ்ரீமான் டி. பிரகாசம் பந்துலு காருவிடம் சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீமான்கள் கே. பாஷியம் M.L.A, ஜில்லா சங்கத்தலைவர் C. நாஸிம்மாச்சாரியார், திவான் பகதூர்கள் வி. பாஷ்யம் அய்யங்கார், கே. தேவசிகாமணி முதலியார் M L C, ராவ் பகதூர். A. ராஜாபாதர் முதலியார், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் C. N. முத்துரங்க முதலியார் M.L.A, (டில்லி) ஜில்லா சங்கப் பொறுக்காரியதரிசி A. K.

வேணுகோபாலாசார்யார் அடங்கிய தூது கோஷ்டியினர் தூது சென்று அடியில் விவரித்த படி நமது ஜில்லா வாசிகளின் நிலைமை எடுத்துரைத்து, கட்டாயம் 25 சத விகிதம் நிலவரி குறைக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினர். கனம் மந்திரி யோசித்து தக்கபடி செய்வதாக வாக்களித்தார்.

செங்கற்பட்டு ஜில்லா விவசாயிகளின் சார்பாக மேலே குறிப்பிடப் பட்டவர்கள் அடங்கிய தூது கோஷ்டி தெரிவித்துக் கொண்டதின் சாராம் சமாவது:—

செங்கற்பட்டு மானம் பார்த்த சீமை என்பதைஎல்லோரும் அறிந்தே இருக்கிறார்கள். பழையகாலத்திலிருந்தே பூமிகீழ்த்தரமான தென்றும் 100-க்கு 55 பட்டாக்கள் 10 ரூபாய்க்குக் குறைந்த நிலவரி அளிக்கின்றன வென்றும், வரிமிகக் கஷ்டத்துடன் வசூலிக் கப்படுகிறதென்பதையும் போர்டாரே கவனித்து பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

2. சென்ற 7, 8 வருஷங்களாக கால மழையின்றியோ மழையில்லாமலோ, மிகவும் குறைந்த விளைச்சலோ அல்லது அடியோடு சாவியோ ஏற்பட்டு விவசாயிகள் நிலவரியைக் கட்டுவதற்குக் கூட சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள்.

3. இஜ்ஜில்லாவிற்கு மேய்கால் வசதி, எருவசதி இவைகளின் குறைவு காரணமாக பூமிஸாரமற்று விளைச்சல் குறைவாயிருக்கிறது.

4. இஜ்ஜில்லாவிற்கு நீர்ப்பாசன ஆதாரங்கள் முக்கியமாக குளங்கள், தாங்கல்கள், கசங்கள், கசக்கால்கள் இவைகளேயாகும். சென்ற சிலவருஷங்களாக ஜனங்களின் சிரமதசை காரணமாக இவற்றில் பல ஜனங்களால் கவனிக்கப்படாமல் தூர்ந்து போயிருக்கின்றன. கவர் மெண்டாரும் இவைகளை கவனிக்கவில்லை. அந்தக்காலத்தில் மிஸ்டர் ஸ்மாலி, தேவசிகாமணி பிள்ளை முதலியோர்கள் நீர்ப்பாசன வசதியற்ற நிலங்கள் எல்லாவற்றையும் (மானுவரி நஞ்சை உட்பட) புஞ்சை நிலங்களாக கருதவேண்டும் என்று சிபார்சு செய்திருக்கின்றனர். மேலும் அப்பொழுதே ஏகருக்கு மிகவும் உயர்ந்த சராசரி விளைவு, 384 பட்டணம் படியாக போர் டார் கணக்கெடுத்திருக்கிறார்கள். 1855ல் போர்டார் புஞ்சை நிலங்களில் இரண்டாவது போகத்திற்கு விதிக்கப்பட்டிருந்த வரியை எடுத்து விடுமாறும், இரண்டாவது போகம் சாகுபடி செய்யாத பொழுது இருபோக நஞ்சை நிலத்தின் தீர்வையில் மூன்றிலொரு பாகம் குறைத்து விடவேண்டும் என்றும் உத்தர விட்டிருக்கிறார்கள்.

5. சாகுபடிச் செலவுகள் இப்பொழுது மிகவும் அதிகமாகி விட்டன. ரூபாய் 22 முதல் 25 வரை உள்ள ஒரு ஏகர் நிலவருமானத்தில் ரூபாய் 15 சாகுபடிச்செலவுகளுக்கு போய்விடுகிறது.

6. ஜில்லா விவசாயிகள் நிலவரியைக் கொடுப்பதற்கு வாங்கின கடன் பளுவினால் உயிர்வாழ்வதற்கே தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

7. மார்ஷ் பாங்ஸ் கமிட்டியார் இந்த ஜில்லா 1914க்கு முன்பு ஸெட்டில் மெண்ட்

ஆனது என்பதை மாத்திரம் எடுத்துக்கொண்டு, ஸெட்டில்மெண்டு செய்தபொழுது நிலவரியானது, பாலாறு நல்ல நீர்ப்பாசன வசதி என்று வைத்துக்கொண்டு போடப்பட்டது என்பதை கவனிக்கவில்லை. மேலும் முன்பு ஸெட்டில்மெண்டானபொழுது காலா காலங்களில் மழை பெய்ததென்பதையும், சாகுபடிச் செலவுகள் அப்பொழுது ஏகருக்கு 5 அல்லது 6 ரூபாயாக இருந்த தென்பதையும், பாலாற்றில் இப்பொழுது மைசூர் கவர்மெண்டாரின் தேக்கங்கள் காரணமாக, அடியோடு தண்ணீரே வருகிறதில்லை என்பதையும் கவனிக்க வில்லை. ஆகையால் இந்த ஜில்லாவைப் பொறுத்தவரை மார்ஷ்பாங்ஸ் ரிப்போர்ட்டு மிகவும் தவறான தாகும்.

8. இந்த ஜில்லா 1802இலிருந்தே பிற்போக்கானது என்பதை போர்டாரே ஒத்துக்கொண்டனர். ஆகையால் இந்த ஜில்லாவிற்கு நிலவரி வஜா அளிக்காதது மிகவும் அநியாயமாகும்.

இச்சந்தர்ப்பத்தில் இத்தூது கோஷ்டியினர் தற்பொழுதைய நிலவரியானது நியாயமற்றதும், விவசாயியின் வருமானத்திற் கேற்றபடி, இல்லை என்று தெரிவித்துக் கொள்வதோடு இந்நிலவரி முறையை மாற்றி அமைக்கும் வரை தற்பொழுதைய நிலவரியை நிரந்தரமாக 100க்கு 25சதவிகிதம் குறைத்தாலல்லாது விவசாயிக்கு வேறெந்த உதவியும் தகுந்த பரிகாரமாகாது என்று வற்புறுத்துகிறார்கள். மேலும் அவர்கள் இஜ்ஜில்லாவிலுள்ள நிலங்கள் எல்லாவற்றையும் புஞ்சை நிலங்களாகக் கருதி புஞ்சைத்தீர்வை விதிக்குமாறும், கவர்மெண்டு தண்ணீரை நீர்ப்பாசனத்துக்கு உபயோகப்படுத்தும் இடங்களில் தண்ணீர்த்தீர்வை தனியாக விதிக்குமாறும் வேண்டிக் கொள்ளுகின்றார்.

இதோடு மார்ஷ்பாங்ஸ் கமிட்டியார் சிபார்சு செய்தபடி வியாபாரப் பொருள் களாகிற டீ, ரப்பர், மணிலாக் கொட்டை இவைகளின் பயிர்களுக்கு வஜா அளிப்பது வழக்கத்திற்கு விரோதமாகும். ஆகையால் உணவுப்பொருள்களின் பயிர்களுக்கு மட்டுமே வஜா அளிக்கப்படவேண்டும்.

இவ்விதம் செய்தால் எல்லா ஜில்லாக்களுக்கும் திருப்திகரமாக வித்தியாசமின்றி ஒதுக்கி வைக்கப்பட்ட 75 லக்ஷத்திலிருந்தே நிலவரி வஜா அளிக்கமுடியும். மேலும் மேட்டுக்குடிகளிடம் வருமான வரியைப்போல நிலத்திலிருந்து வருமானம் நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கவும் ஸ்வல்ப நிலங்களை உடைய தாழ்ந்த குடிகளிடம் தொழில் வரியைப்போல வசூலிக்கவும் முறையேற்பட்டு இப்பொழுதுள்ள அநீதமான நிலவரி முறை மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.

பிறகு வெள்ளத்தினால் சேதமேற்பட்ட இடங்களுக்கு ஜில்லா அதிகாரிகள் சமயத்தில் சென்று பார்வையிட்டு உதவிபுரிந்ததை பாராட்டிச் சொன்னதாவது:—

தாழ்ந்த இடங்களில் இருக்கும் சேரிகளை மேடான இடங்களுக்கு மாற்ற வேண்டும். ஆறு, ஏரிகளின் கரைகள் போதுமான அளவு உயர்த்தப்பட்டு மழைகாலங்களில் வெள்ளத்தினால் ஆறு அல்லது ஏரிக்கு பக்கங்களிலுள்ள கிராமங்கள் சேதமடையாமல் பாதுகாக்க

படவேண்டும். வெள்ளத்தினால் எக்கல் அடித்துப் போன நிலங்களுக்கு வரி வஜா அளிக்கப் படவேண்டும். தூர்ந்து போன கசக்கால், வருகால்களை குடிமராமத்தில் கிராமவா[illegible]களே செய்து கொள்ள முடியாதாகையால் கவர்மெண்டாரே செய்ய உத்தரவுகள் பிறப்பிக்[illegible]ப்பட வேண்டும்.

———:(o):———

# பயிர்த் தொழில்.

(சென்ற மாதத்திய தொடர்ச்சி)

சென்ற மாதப்பத்திரிகையில் நமது செங்கற்பட்டு ஜில்லாவில் சாதாரணமாக விவசாயிகள் முறையே கவனித்து, விவசாயத் தொழிலை நடத்துகிறதில்லை என்றோம். விவசாயத்தொழிலில் முதன் முதன்மையாக ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டியது கால் நடைகள். ஜனங்கள் அவரவர்களின் நில விஸ்தீர்ணத்துக்குத் தக்கவாறு உழவு மாடுகள் வைத்துக்கொண்டிருக்கின்றனர். சிலர் விலை உயர்ந்த வண்டி மாடுகளும் கவலை மாடுகளும் வைத்திருக்கின்றனர். தற்போது நகரங்களிலும் விடகிராமங்களில் காப்பி என்னும் பேய் அதிக வலுவுடன் வேலைசெய்து வருகிறபடியால் பசு அல்லது எருமை மாடுகளும் வைத்திருக்கின்றனர். இக்கால் நடைகளை சாதாரணமாக நல்ல விலை கொடுத்து வாங்குகிறார்கள். ஆனால் இவைகளை பத்திரமாகக் காப்பாற்றும் ஊக்கம் பல கிராமங்களில் குறைவாகவே காண்கிறது. அநேக கிராமங்களில் சகோதரர்கள் வேலை இல்லாத காலங்களில் உழவு மாடுகளுக்கும் கறவை இல்லாத பசு எருமைகளுக்கும் இரவு தீனிபோடாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. தாங்கள் குடிஇருப்பதற்கு மிதமிஞ்சிய செலவில் 1½ அல்லது 2 வட்டிக்கேனும் பிரதிபலன் அளிக்கக் கூடிய தங்களது புலங்களை அடமானம் வைத்து வீடு கட்டிக்கொள்வது ஸகஜமாக இருக்கிறதே ஒழிய தங்கள் தோழனும் செல்வமுமாகிய கால் நடைகளின் பாதுகாப்பில் பலரும் கவனம் செலுத்தவில்லை என்றே சொல்லலாம். உதாரணமாக மாடுகளை தங்கள் வீட்டுக்கெதிரில் மழை, குளிரிலும் கூட திறந்த வெளியில் கட்டி வைக்கிறார்கள், அல்லது ஒரு தாழ்ந்த கொட்டகையில் ஒன்றோடொன்று சண்டை போட்டுக்கொள்ளும் விதத்தில் கட்டி விடுகின்றனர். வாயில்லாத ஜீவன்களுக்கு போதுமான தீனி போடுவதில்லை. குடிக்க தண்ணீர்த்தொட்டியும் கிடையாது. இம்மாதிரி கால் நடைகளிடம் விசுவாசம் வைத்தால், இவைகள் குறைவு பட்டு சேதம் உண்டாவதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

நாம் குடியிருக்க வீடு எவ்வளவு முக்கியமோ அதையும் விட கால் நடைகளுக்கட்டும் மாட்டுத்தொழுவம் முக்கியமாக ஒவ்வொரு விவசாயியும் கருதவேண்டும். பல இடங்களில் மாட்டுத்தொழுவங்களையும் வைக்கபோர் இடத்தையும் விவசாயிகள் வைத்திருப்பது மிக மகிழ்ச்சியை உண்டு பண்ணுகிறது. நமது ஜில்லாவிலும்கூட விவசாயத்தொழிலின் அருமையை அறிந்த பல சகோதரர்கள் மாட்டுக் கொட்டகைகளை நிர்மாணிக்கப்படவேண்டும் சுவர்களிலிருந்து இரண்டடிவிட்டு குச்சடித்து கனத்தகொம்புகளால் தட்டியாகக் கட்டி மாடுகளை அதனதற்கான இடங்களில் கட்டிவைத்து சாதாரணமாக வைக்கோலை போடவேண்டும். கால்

சருக்காமல் மாட்டின் மூத்திரம் வீண் போகாமல் எருக்குழிகளில் விழும்படிக்கு கால்வாய்களுடன் தரை தளவரிசை செய்யப்படவேண்டும். மாடுகளிடம், கொசு பூச்சிகள்வரா வண்ணம் கூடுமான தூரத்தில் அவரவர்களின் கால்நடை சங்கியைக்கேற்றவாறு குழிதோண்டி அக்குழியில் தினந்தோறும் காய்ந்துபோகவிடாமல் மாடுகளின் சாணி குப்பையாவையும் கொட்டி ஏற்பாடு செய்ய வேண்டும். மாட்டுக் கொட்டையில் நிரந்தரமாக தண்ணீர் தொட்டி அமைக்கப்பட வேண்டும். இம்மாதிரியான ஏற்பாடுகளுடன் விவசாயிகள் மாட்டுத்தொழுவத்தை முக்கியமாக கவனித்தார்களேயானல் தங்கள் மாடுகளுக்கு ஆயுளும் ஆரோக்கியமும் விருத்தியாகி நீண்டகாலம் உழைக்கும் பெரிய ஸம்பத்து ஏற்படுவதுடன் அவர்களின் நிலங்களுக்கு சமானமற்ற முதல் தரமான மாடுகளின் சாணி, மூத்திரம் கலந்த எரு கிடைக்கும். கால் நடைகளிடம் எவ்வளவு விச்வாசத்துடனும், கௌரவத்துடனும் ஒரு விவசாயி நடத்து கொள்ளுகிருனே அவ்வளவுக்கு பதின்மடங்கான அருளை கடவுள் பூமியின் மூலம் புரிவார்.

ஆனல் மேற்குறிப்பிட்டபடி தாழ்ந்த நிலையில் இருக்கும் பெரும்பான்மையான ஜில்லா விவசாயிகள் இத்தகைய மாட்டுக் கொட்டகையை பனஓலையினல் ஆனாலும், மண்தரையேனும், தங்கள் குடியிருப்பு வீடுகளில் காட்டும் ஒரு சிரத்தையோடு இத்தொழுவத்தையும் கவனித்தால் போதுமானது. (தொடரும்.)

# விவசாயிகளின் கடன் சுமையை நீக்கும் சட்ட மசோதா.

(வி. நரசிம்மாசாரியார், B.A., B.L.)

———:(o):———

1. விவசாயிகள் கடன் சுமையால் கஷ்டப்படுவதினல் அதை நீக்க முயல்வது நல்ல காரியம் என்பது யாவாரலும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம். அச்சுமையை நீக்கும்வழி எது என்பதில் அனேக அபிப்ராய பேதங்கள் உண்டாயிருக்கின்றன. கடன் காலணுவரையிலாவது கொடாமல் ஏராளமான கடன் வங்கியிருப்பவர்கள் இம்மசோதாவைக்கண்டு ஆநந்தக் கூத்து ஆடுகிருர்கள். கடன் கொடுத்தவர்கள் வயிறு எரிகிருர்கள். காங்கிரஸ் ப்ரதிநிதிகள் தங்கள் சொந்த அபிப்ராயம் எப்படியிருந்தபோதிலும் கட்சியின் சட்டதிட்டங்களுக்குத் தலையாட்ட வேண்டியவர்களாயிருக்கிருர்கள்.

2. இம்மசோதாவின் முக்கியமான அம்சங்கள் இரண்டு. 1937ஹு அக்டோபர்மீ வரையிலுள்ள வட்டி பாக்கி பூராவும் தள்ளிவிடவேண்டும் என்பதும் அசலுக்கு இரண்டு மடங்கு வட்டி வாங்கியிருந்தால் பூராகடனும் பைசலாகிவிட்டது என்னபதுமாம்.

இம்மசோதாவின் லாபலோபங்களை அவரவர்தனித் தனியாய் தனக்குமாத்திரம் லாபகரமானதா அல்லது நஷ்டமா என்று பார்க்கக்கூடாது. பொதுஜன நன்மையையே நாடவேண்டும்.

ஓர் விதவைசுமார் 27 வருஷங்களுக்கு முன்தன் மாமியார் வீட்டிலிருந்து ஜீவனும்

சமாகக்கிடைத்த ரூ. 500ஐயும் ஓர் விவசாயி இடம் முக்கால் வட்டிக்குக் கொடுத்து ஜீவனம் செய்துவருகிறாள். வருஷம் 1க்கு 45 ரூ. வீதம் 27 வருஷங்களுக்கு 1215 வட்டியில் வாங்கி சாப்பிட்டு விட்டாள். இம்மசோதாபடி அவ்விதவைக்கு இனி கால் பைசாகூட கிடையாது. அவள் கடன்பூராவும் பைசலாகிவிடாது என்றால் அவள் வயிற்றெரிச்சல் யாரை அடையுமோ? கடன்வாங்கினவன் மனங்கூடதாளாது. இவ்விதவை ஸ்தானத்தில் விதவை அல்லாத அனேக புருஷர்களும் இருக்கிறார்கள்.

அன்றியும் 1930ஆம் முதல் 1937ஆம் வரையில் மழைக்குறைவினாலும் கிஸ்திகட்ட வழியில்லாமல் ஸம்ஸாரிகள் வட்டி கொடுக்க சக்தியற்று கடன் வாங்கிஜீவித்திருப்பது யாவருக்குந்தெரிந்ததே. விவசாயிகள் கடன்வாங்குவது மல்லாமல் வட்டியில் ஜீவிக்கிறவர்களும் கடன் வாங்கும்படி நேரிட்டது. இப்போது நின்ற வட்டி பைசலாகிவிட்டது என்றால் வட்டியில் ஜீவிப்பவர்கள் தாங்கள் வாங்கின கடனை எப்படித்திருப்பிக் கொடுக்கிறது.

அனேக பத்திரங்களில் பயத்துக்காக வருஷவாரியில் வட்டியை சரிவரக்கொடுக்கத் தவறினால் தொடர்வட்டி கொடுக்கவேண்டும் என்று எழுதுவதுண்டு. தொடர்வட்டி ஒரு பைசா அளவு வசூல் செய்யாதவனும் செய்தவனும் ஒன்றாகிவிடுவது நியாயமா?

கடன் சுமைக்குக்காரணமான நிலவரிச்சுமையைக்குறைக்காமலும் மாசூல் அபிவிருத்தி செய்ய சலாசாஸனம், எரு, தழை முதலியவைகளுக்கு ஏற்பாடு செய்யாமலும் இம்மசோதா கொண்டுவந்தது கடனுக்குக் காரணமான வேரைக்களையாமல் நுனிமரத்தைவெட்டி பக்கத்தில் நின்றவன் தலையில் சாய்க்கிறாப் போல் இருக்கிறது. காங்கிரஸ் மந்திரிகள் புத்திசாலிகளாயினும் அவர்கள் வீட்டுச்சுரைக்காயைக் கண்டறியாதவர்கள். அதில் அனேகர் வக்கீல்களாயிருந்தவர்களாகையால் தங்கள் சொல் வன்மையினால் பொய்யும் மெய்யாக்கும் படியான வல்லமையுடையவர்கள். அவர்களுக்கு விரோதமாய்ச் சொல்லுபவர்களை தேசத்ரோகி என்றும் விவசாயவிரோதி என்றும் தள்ளிவிடுகிறார்கள். இச்சட்டத்தால் காங்கிரஸ் கக்ஷிக்காரர் செல்வாக்கு குறையும் என்று நான்வருந்துகிறேன். கடன் கொடுத்தவர்கள் இருவரையும் இரண்டுகண்ணாகக்கொள்ளவேணுமேயன்றி ஒருகண் சுண்ணாம்பு ஒருகண் வெண்ணெயாகக் கொள்வது தர்மத்ரோகம்.

நான் முதல் மந்திரிக்கு அனுப்பிய யாதாஸ்தில் வட்டியை சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி 100-க்கு 4முதல் 9வரையில் குறைத்து வாங்கிக் கொள்ளும் படிக்கும் இனி அரைவட்டிக்கு மேல் வாங்கக்கூடாது என்றும் விவசாயிகள் எவ்வளவுகடன் பட்டிருந்தபோதிலும் அவர்கள் சொத்தில் கால் அல்லது அரைக்கால் பாகம் கடனுக்காக விற்கக்கூடாது என்றும் அந்தபாகம் எப்போதும் அவர்கள் ஜீவனத்துக்கு நிறுத்தி விடவேண்டியது என்றும் இம்மாதிரியான சட்டம் செய்வதே யுக்தமென்றும் தோன்றுகிறது என்று சொல்லியிருக்கிறேன்.

ஸ்ரீகிருஷ்ணபகவான் அருளிச்செய்த கீதையில் தான் எல்லாப் பிராணிகளிடத்திலும் சமமான அன்புபாராட்டுமவர் என்றும் ஒருவரிடம்ப்ரியம் மற்றொருவரிடம் அப்ரியம் என்பது கிடையாது என்றும் சொல்லிய ஸநாதநதர்மவாக்கியத்தை எல்லாரும் நன்குணர்வார்களாக.

''கொள்கை கொள்ளாமை இலாதான்
எள்கல் இராகம் இலாதான்
விள்கை விள்ளாமை விரும்பி
உள்கலந்தார்க்கு ஓர் அமுதே''

# பொன்னேரி தாலூக்கா மிராசுதாரர்கள் கூட்டம்.

———(:o:)———

4-12-37 அன்று சுப்பாரெட்டி பாளயத்தில் பொன்னேரி தாலுக்கா சங்க ஆதரவில் பல கிராமவாசிகளடங்கிய பொதுக்கூட்டம் கூடிற்று. ம-ா-ா-ஸ்ரீ வெங்கடநாரஸ ரெட்டியார் தலைமை வகித்து ஜில்லா சங்கப் பொதுக்காரியதரிசி இஜ்ஜில்லாவின் முன்னேற்றத்திற்கு உழைத்து வருவதை பாராட்டி அவர் முயற்சியால் வெளி வந்துள்ள "விவசாயி" எனும் மாதாந்திர பத்திரிகையை ஆதரித்து அவருக்கு உத்ஸாகம் அளிக்க கேட்டுக் கொண்டார்.

பின்னர் ஸ்ரீ. ர. கே. வேணுகோபாலசாரியார் ஜில்லாவின் முக்கியமான சில துன்பங்களைப் பற்றியும், 2-12-37ல் கனம் ரெவின்யூ மந்திரியிடம் தூது கோஷ்டியினரின் முறையீடுகளைப் பற்றியும் விஸ்தாரமாக எடுத்துரைத்து, கிராம வாழ்வில் ஒற்றுமையுடன் தங்கள் கடைமைகளை தெரிவித்தபின் அடியில் கண்ட தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப் பட்டன.

(1) இந்தக் கூட்டம் வெள்ள காலத்தில் ஏரோப்ளேனிலிருந்து இந்த இடத்தை பார்வையிட்டுச் சென்றதற்காக ஜில்லா கலக்டரைப் பாராட்டுகிறது.

(2) சுப்பாரெட்டி பாளயம், பள்ளிபுரம், வேபுகுண்டா ரெட்டிபாளயம், வெள்ளு வாயல் சாவடி முதலிய கிராமங்கள் நாலா பக்கங்களிலும் குசஸ் தலை ஆற்றால் சூழப்பட்டிருப்பதால், சில அங்குல மழை பெய்த போதிலும் வீடுகளும் வயல்களும் தண்ணீரில் முழுகி விடுகின்றன. சமீபத்தில் ஏற்பட்ட பெரிய மழையிலிருந்து தெய்வச் செயலாக மனிதர்களும் கால் நடைகளும் பிழைத்துக் கொண்டனர். ஆகையால் ஆற்றங்கரைகள் பலமாக போடப்பட வேண்டுமென்றும் ஜில்லா கலக்டரை சேதமடைந்த இடங்களை பார்வையிட்டு ரிபேர் செய்ய உத்திர விடவேண்டும் என்றும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

(3) சுப்பாரெட்டி பாளயம், பள்ளிபுரம், கௌண்டன் பாளயம், கொண்டோகிரி மீஞ்சூர் இவற்றின் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் வள்ளூர் அணைக்கட்டு வாய்க்காலே ஆனாலும், மேற்கூறிய நிலங்கள் மேட்டிலிருப்பதால், கால்வாய்களில் சரியாக தண்ணீர் வருகிறதில்லை. அதனால் அங்குள்ள நிலங்களில் சில சாவியாகி விடுகின்றன. ஆகையால் கவர்மெண்டார் நெல்லூர், கிருஷ்ணா ஜில்லாக்களில் போல ரெகுலேடர்கள் மூலமாக நிலத்தின் பரப்பிற்குத் தகுந்தாற்போல் தண்ணீர் கொடுக்க வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

(4) ஸ்ரோத்திரியம், ஜமீன் கிராமங்களிலுள்ள மிராசுதாரர்கள், ரயத்துக்கள் இவர்களின் நன்மையை இப்பொழுது ஏற்பட்டிருப்பது போன்ற வெள்ள காலங்களில் கூட கவனிப்பதில்லையாதலால், கவர்மெண்டார் ரிப்பேர் முதலியன செய்து கொடுக்கச் சொல்ல வேண்டுமென்றும் அப்படி அவர்கள் செய்யத் தவறினால் கவர்மெண்டாரே ரிபேர்களைச் செய்து விட்டு ஜமீன் ஸ்ரோத்திரியந்தாரரிடமிருந்து செலவை வசூல் செய்து கொள்ள வேண்டுமென்றும் இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

தலைவரின் முடிவுரைக்குப்பின் ஸ்ரீமான் நாகராஜ சர்மாவால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் கலைந்தது.

———:(o):———

8, 9-12-37ல் விவசாயி கடன் மசோதாவுக்கு மந்திரிகளை பாராட்டி நிலவரி குறைக்க வேண்டுமென ஸ்ரீபெரும்பூதூரிலும், மணிமங்கலத்திலும் கூட்டங்கள் நடைபெற்றன மணிமங்கலத்தில் பிர்கா சங்கஸ்தாபனம் செய்யப்பட்டது.

# செய்திகள்.

மத்திய மாகாண கவர்மெண்டார் மதுவிலக்கு மசோதாவை மத்தியமாகாண சட்டசபையில் கொண்டு வந்திருக்கிறார்கள். இம்மசோதா சட்டமானதும் மூன்று அல்லது, நான்கு ஜில்லாக்களில் அமுலுக்கு கொண்டுவரப்படும். ஐக்கிய மாகாணத்திலும் இம்மாதிரி மசோதா சீக்கிரத்தில் கொண்டுவரப்படுமெனத் தெரிகிறது.

* * *

காந்தி ஆண்டர்ஸன் சந்திப்பின் பயனாக வங்காள கவர்மெண்டார் 1100 பந்தோபஸ்துக் கைதிகளை விடுவிக்க உத்திரவிட்டுள்ளார்கள். அந்தமான் கைதிகள் விஷயம் கவர்னரின் சொந்த அதிகாரத்திலேயே இருப்பதால் அது விஷயத்தில் வங்க மந்திரிகள் தலையிடமுடியாதென்று சொல்லபடுகிறது.

* * *

நமது சென்னை மாகாணத்தில் அடுத்தவருஷத்தில் தமிழ்நாட்டில் 6ஜில்லாக்களும், தெலுங்கு சீமையில் 6ம், கேரளாவில் 1ம் கர்நாடகத்தில் 1ம் மதுவிலக்கு அமுலுக்குவருமென தெரியவருகிறது.

* * *

மே. த. ராஜப்பிரதிநிதி தன்மனைவியாருடன் சென்னைக்கு விஜயம் செய்து சென்னைராஜதானியில் சுற்றுப் பிரயாணம் செய்வாரெனத்தெரிகிறது. ராஜீயவாதிகள் அகில இந்திய சமஷ்டிசபை ஏற்பாட்டை ஒட்டி வருகிறாரெனக் கருதுகின்றனர்.

* * *

பகவத் சிருஷ்டியில் மனிதர்களுக்கு உள்ளது போல் தாவரவர்க்கங்களுக்கும் உயிர் இருக்கிறது என்பதைக் கண்டறிந்தவர் ஜகதீஸ் சந்திர போஸ் மரணமடைந்தார். இவர் காங்கிரஸுக்கு ஒரு லக்ஷம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று தமது உயிலில் எழுதியிருக்கிறாராம்.

* * *

நமது ஜில்லா சங்கம் நீர்ப்பாசனத்துக்கு தற்போது பிரயோசனமில்லாமல் இருக்கிற பாலாறு, குசஸ்தலை, அடையாறு, ஆரணி, செய்யாறு முதலிய ஆறுகளுக்கு தேக்கம் கட்டி இறந்துபோயிருக்கும், இவ்வாறுகளை புத்துயிர் பண்ணி கொடுக்குமாறு பொதுமரா மத்திலாகா மந்திரிக்கு எழுதியிருக்கிறது.

* * *

இந்தியா சட்டம் எப்படி அமுல் நடந்து வருகிறது என்பதை நேரில் காண ஆவல் கொண்டு லோதியன் பிரபு இந்தியாவிற்கு விஜயம் செய்திருக்கிறார்.

* * *

இந்தியாவில் க்ஷயரோகத்தினால் ஏராளமான பேர்கள் மரணமடைவதை உத்தேசித்து லேடிலின்லித்கோ (வைஸிராயின் மனைவி) க்ஷயரோக நிவாரண நிதி ஒன்று திரட்டப்போகிறார். நமது மாகாண முதன்மந்திரி இதற்கு தனது பூரணஆதரவை அளிப்பதாகக்கூறியிருக்கிறார். வைஸிராயின் மனைவியாரின் வேண்டுகோளுக்கிணங்க நமது சக்கிரவர்த்தி முதலாக பலர் பலபாகங்களிருந்தும் ஆயிரக்கணக்கில் பண உதவி புரிந்து வருகின்றனர். சேரும் தொகையிலிருந்து ஒவ்வொரு பெரிய நகரத்திலும் ஆஸ்பத்திரி நிர்மாணிக்கப்படும்.

## வெளிநாட்டுச் செய்திகள்.

சீனா ஜப்பான் யுத்தம் வெகுமும்மரமாக நடந்து வருகிறது. ஜப்பானியர் வெகுதூரம் சைனாவிற்குள் முன்னேறியிருக்கின்றனர். ஜப்பானியர் நான்கிங்கை பிடித்துவிட்டார்கள்.

* * *

ஜினிவாவில் இருக்கும் சர்வதேச சங்கத்திலிருந்து இத்தாலி விலகிக்கொண்டு விட்டது. ஜர்மானியப்பத்திரிகைகள் இதை ஆதரிக்கின்றன.

* * *

சீனியரை, நாங்கிங்கை ஜப்பானியர் ஆக்கிரமித்து, தாக்கியடிக்கும்போது, அவர்களின் குண்டு வீச்சினால் அமெரிக்கன் சப் ஸ்டீமர்களிரண்டும், பிரிடிஷ் கப்பலொன்றும் சேதமடைந்தன. ஜப்பானிய சக்கிரவர்த்தி, வருத்தம் தெரிவித்து, சேதமடைந்த கப்பலை தப்பித்து ஜனங்களை காப்பாற்ற ஜப்பானிய படகுகள் அனுப்பப்பட்டன.

"சுதேசமித்திரன்" விமரிசனம்.

11-12-37.

# விவசாயி.

[ஆசிரியர் அ. கொ. வேணுகோபாலாச்சாரியார், 1 தெற்கு மாடவீதி, திருவல்லிக்கேணி, சென்னை. வருட சந்தா ரூ. 1-0-0]

"விவசாயி" என்ற இந்த மாதாந்திர பத்திரிகை செங்கற்பட்டு ஜில்லா நிலச்சுவான்கள் சங்கத்தின் ஆதரவில் வெளிவருவது. இப்பத்திரிகையின் மூன்றும் இதழ் இப்பொழுது நமது பார்வைக்கு வந்திருக்கிறது. இதில் விவசாயிக்கு உபயோகமான பல விஷயங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. செங்கற்பட்டு மற்ற சில ஜில்லாக்களை உத்தேசித்து பொதுஜன உணர்ச்சி விஷயத்தில் பிற்போக்கானதென்று கூறப்படுவதுண்டு. ஸ்ரீமான் வேணுகோபாலாச்சார்யார் ஜில்லா நிலச்சுவான்கள் சங்கக்காரியதரிசி முறையில் ஜில்லாவின் பல பாகங்களுக்குச் சென்று கஷ்டங்களை அறிந்திருக்கிறார். அவர் இதன் ஆசிரியராகயிருப்பதால் அவர் இப்பத்திரிகையை ஜில்லா விவசாயிகள் முன்னேற்றத்திற்கான வழியில் நடத்துவாரென எதிர்பார்க்கலாம். விவசாயிகளுக்கென பிரத்தியேகமாக நடத்தப்படும் இப்பத்திரிகை அவர்களுடைய பல குறைகளை வெளியிட உபயோகமாயிருக்கும்.

Regd. No. M. 3782

அருமை

சகோதரர்களே!

சகோதரிகளே!!

**கவனியுங்கள்! ஆதரியுங்கள்! மேன்மையடையுங்கள்!**

1. உங்கள் ஜில்லாசங்கம், உங்களுக்கு கிடைத்திருக்கும் நிலவரிக் குறைவுக்கு உழைத்ததை கவனியுங்கள்.

2. உங்கள் சங்கம் கடன் பஞ்சநிவாரண விஷயத்தில் செலுத்தி வரும்பொறுப்பை கவனியுங்கள்.

3. உங்கள் சங்கம் உங்கள்ஜில்லாவில் நீர்ப்பாசன அபிவிருத்தியில் காட்டிவரும் ஊக்கத்தை கவனியுங்கள்.

4. உங்கள் சங்கம், ஜில்லா வாசிகளின் மேம்பாட்டிற்கு, கிராம முன்னேற்றத்தில் ஈடுபட்டு செய்துவரும் வேலைகளை கவனியுங்கள்.

தயவு செய்து கவனித்தால், உங்கள் ஜில்லா சங்கத்தை பலப்படுத்த, "விவசாயி"யை ஆதரிக்க உடனே தீர்மானிப்பீர்களென்பது திண்ணம். மிக மிகக் குறைந்த வருடச்சந்தா ரூ ஒன்றை இன்றே மணியார்டர்செய்து, உதவிபுரிய முன்படுவீர்களாக!

நமது வேண்டுகோளுக்கிணங்க பல நண்பர்கள் நமது பத்திரிகைக்கு சந்தாதார்களாகி ஆதரிப்பதற்கு எங்கள் நன்றியறிதலை தெவித்துக்கொள்ளுகிறோம். இதுவரை செலுத்தாத அன்பர்கள் சந்தாத்துகை ரூபா 1/- தயவு செய்து உடனே மணியார்டர் மூலம் அனுப்பி பத்திரிகையை விருத்திசெய்விக்க கேட்டுக்கொள்ளுகிறோம். செல்வந்தர்கள் நன்கொடைகளை அனுப்பி ஆதரிக்கவும் பிரார்த்தித்துக்கொள்கிறோம்.

பத்திராசிரியர்,

1, தெற்கு மாடவீதி, திருவல்லிக்கேணி.

Edited & Published by A. K. Venugopalacharya &
Printed at the Lakshmi Kantha Press, 405, High Road, Triplicane, Madras.